முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 27.11.2025 ,அ.வ.எண். 81/2014, வா.சா.1. காளித்தாய், க/பெ, துரைசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 10 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) தாவா சொத்துக்கள் ஆதியில் எனது தகப்பனார் சுப்பேகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்., 1, 2 பிரதிவாதிகள் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி ஆறுச்சாமிக்கு எதிராக கடந்த 29.03.2013 தேதியில் செய்தித்தாளில் ஒரு பொது அறிவிப்பு வா சா ஆ 6 கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி பொது அறிவிப்பானது தாவா சொத்துக்கள் பிரிபடாத சொத்துக்கள் என்றும் அதனால் சொத்துக்களை வில்லங்கத்துக்கு உட்படுத்தக்கூடாது என்று அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான், அதற்கு ஆறுச்சாமி மறுப்பு அறிவிப்பு 02.04.2013 வா சா ஆ 7 கொடுத்தார் என்றால் சரிதான். வா சா ஆ 7 ல் தாவா சொத்துக்கள் 1989 ம் ஆண்டுக்கு முன்னரே எனது தகப்பனாரும், சகோதரர்களும் பாகம் செய்து கொண்டதாக தெரிவித்திருந்தார்கள் என்றால் சரிதான்.

2) மேற்படி செய்தித்தாள் மறுப்புஅறிவிப்பிற்கு பின்னிட்டு தான் இந்த தாவாவை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பிரிந்த விவரம் தெரிந்து உண்மையை மறைத்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரும், சகோதரர்களும் 18.05.1983 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாக சாசனத்தின் மூலம் பிரிபட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாக சாசனத்தின் அடிப்படையில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் அனுபவித்து வருவதாக வாசா ஆ 7 மறுப்பு அறிவிப்பில் தெரிவித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

3) 2 ம் பிரதிவாதிக்கு பாக பத்திரத்தின் படி பாத்தியப்பட்ட சொத்துக்களின் சின்ன ஒரு பகுதியை செந்தாமரா என்பவருக்கு 2014 ல் விற்பனை

ஒப்பம் /– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 18.05.1983 தேதியிட்ட பாகப் பத்திரப்படி ஆறுச்சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரின் வாரிசுதாரர்கள் 17.04.2014 ம் தேதியில் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாக சாசனப்படி ஆறுச்சாமி கவுண்டரின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

4) ஆறுச்சாமிக்கு பாக சாசனப்படி பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது பெண் மக்களுக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 55 வருடங்களுக்கு முன்பு இருக்கும். சொக்கனூர் கிராமம் சட்டக்கல்புதூரில் இருக்கும் ராமர் கோவில் முன்னிலையில் 1973 பிப்ரவரி 18 ம் தேதியில் ஒரு பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான்,. மேற்படி பஞ்சாயத்தில் நான் காதல்திருமணம் செய்து கொண்டதால் தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று எழுதிக்கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

5) என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள ரேகை என்னுடையதா என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருப்பதாக கூறியிருப்பது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் தாக்கல் செய்துள்ள தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1983 ல் எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா சொத்துக்கள் பாகம் செய்யப்பட்டுவிட்டதால் மேற்படி சொத்துக்களில் பாகம் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

6) பாகம் செய்தது எனக்கு தெரியும் என்றும் மேற்படி விவரத்தை மறைத்து

ஒப்பம் /– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம் /– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.